[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTION.

LEAKAGE OF S.S.L.C. EXAMINATION QUESTION PAPER

MR. SPEAKER : The Hon. Leader of the Opposition has given notice of an adjournment motion.

*SRI V. R. NEDUNCHEZHIYAN : Sir, my adjournment motion reads as follows :

"The question paper on Social Studies of the S.S.L.C. Examination, 1964, was out even before the date of the examination. As a result of this there is unrest among the student population throughout the State. The Government have failed to maintain the secrecy of the S.S.L.C. examination."

இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தாங்கள் எடுத்துத் தீர்ப்பு அளிக்க வேண்டும் என்பதற்காகத் தங்கள் முன்னால் இதை வைக்கிறேன். விதி 42-இன் படி இந்தத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டுமென்று தங்களிடத்திலே கேட்டுக்கொள்வதற்கான முறையில் காரணங்களை வைக்கவும் நான் விரும்புகிறேன். விதி 42-ல் ஒத்திவைப்புப் பிரேரணை அவசர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்றும், திட்டவட்டமாக இந்தப் பிரச்னை இருக்க வேண்டும் என்றும், பொது மக்களைப் பொறுத்த பிரச்னையாக இருக்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த மூன்று இனங்களிலும், நான் கொண்டு வந்திருக்கும் ஒத்தி வைப்புப் பிரேரணையில் கண்டிருக்கும் பொருள் பொருந்தி வரக்கூடிய ஒன்றாகும். அன்று, இந்த ஒத்திவைப்பு பிரேரணைத் தீர்மானம் கொண்டு வந்தபோது "வதந்திகளின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் அமைந்திருக்கிற காரணத்தால், இது ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உட்பட்டு வரக்கூடியது அல்ல" என்ற கருத்தைக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் அன்று தெரிவித்தார்கள்.

அன்று வரக்கூடிய பரீட்சைக் கேள்வித் தாளை முதல் அமைச்சர் அவர்களிடத்திலே நான் எடுத்துக் கூறினேன். பரவலாக இந்தக் கேள்விகள் பரவியிருக்கின்றன. அது எங்கு பார்த்தாலும் பரப்பப் படுகிற அளவுக்கு அமைந்திருக்கிறது. அதனால், அரசாங்கத்திற்கும் கல்வித் துறைக்கும் இழுக்கு ஏற்படும் நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக, அந்தக் கேள்வித் தாள்களை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலமாக உண்மையை அறிந்து கொள்ளலாம் என்று அந்தக் கேள்வித் தாளைக் கனம் முதல் அமைச்சர் அவர்களிடத்திலே அன்று நான் தந்தேன். அன்று நடைபெற்ற பரீட்சையில் கொடுக்கப்பட்ட கேள்வித்தாளில் அன்று நான் கொடுத்த ஏழு கேள்விகள் வந்திருக்கின்றன. இந்தக் கேள்வித் தாளின் குறிப்பில், "முதல் பதினான்கு கேள்விகளில் ஏதாவது ஏழு

கேள்விகளுக்கு விடைகள் கொடுக்கவேண்டும்" என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. நான் அன்று கொடுத்த அந்தத் தாளில் கூட கீழ்க்கண்ட ஏழு கேள்விகள் அடங்கியிருக்கின்றன:—

"குப்தர் காலத்து இலக்கிய வளர்ச்சியை விவரிக்கவும்.

"படை மான்யத் திட்டத்தின் முக்கிய அம்சங்களை விளக்குக.

அமெரிக்க சுதந்திரப் போரைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

முதல் உலகப் போரின் காரணங்களையும், விளைவுகளையும் பற்றி விவரித்து எழுதவும்.

இந்தியாவை நான்கு பெரிய இயற்கையமைப்புப் பிரதேசங் களாகப் பிரித்து ஒவ்வொன்றைப் பற்றியும் சுருக்கமாக விவரிக்க வும்.

சைபீரியாவின் பூகோள அமைப்பைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்தியா படத்தில்—

(ஏ) குப்த பேரரசைக் குறிப்பிடுக

(பி) பின்வரும் இடங்களையும் பிரதேசங்களையும் குறிப்பிடுக: அலகாபாத், பாடலிபுத்திரம், உஜ்ஜைன், காஞ்சி, நாலந்தா, மகதா, நேபாளம், மாளவம், குஜராத், அஸ்ஸாம்".

மேற்கண்ட ஏழு கேள்விகளும் அதிலே இடம் பெற்றிருக்கின்றன. இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்தக் கேள்விகள் வெளியானதன் விளைவாக நாட்டு மக்களிடத்திலும், பத்திரிகை உலகத்திலும் பரபரப்பு ஏற்பட்டிருப்பதன் காரணமாகக் கல்வித் துறைக்கு இழுக்கு ஏற்படுகிற அளவுக்கும், அரசுக்கு இழுக்கு ஏற்படுகிற அளவுக்கும் நிலைமைகள் இருக்கின்றன. இதன் காரண மாக மறு பரீட்சை கொண்டுவர வேண்டும் என்ற அந்த நிலையை நான் வற்புறுத்திக் கூற விரும்பவில்லை. அதன் காரணமாக, இலட்சக் கணக்கான மாணவர்களுடைய நிலைமைகளும், பெற்றோர் களின் நிலைமைகளும், அரசாங்கத்திற்குப் பெரும் செலவு ஏற்படும் நிலைமைகளும் ஏற்படக்கூடும். ஆதலால் அதை வற்புறுத்துகிற நிலை மையில் நான் இல்லை. ஆனால், இந்தக் கேள்வித்தாள் வெளி வந்த தன் காரணமாக ஏற்பட்டிருக்கிற இழுக்கைப் போக்க வேண்டிய அவசியம் உடையதாக அரசு இருக்கிறது. அந்த அடிப்படையிலே தான் விவாதித்து தீரவேண்டிய கட்டத்திலே இருக்கிறோம். தக்க நடவடிக்கைகள் அரசு இப்பொழுது எடுக்க முன்வந்தால் தான், இந்த மாநில அரசாங்கத்திற்கு இருக்கும் பெருமையையும், கல்வித் துறைக்கு நீண்ட காலமாக இருக்கும் பெருமையையும் எதிர்க் காலத்தில் காப்பாற்ற முடியும். அந்த வகையிலே யார் இத்தகைய குற்றத்திற்குக் காரணம் என்பதைக் கண்டுபிடித்துத் தக்க தண்டனை விதிப்பதன் மூலமாக எதிர்காலத்தில் இத்துறையைச் சீர்பெற வைக்க முடியும். இந்தக் குற்றங்களைக் கண்டு பிடிக்கும் முறையில், இதற்குரிய திறமை இரகசியப் போலீஸ் இலாகாவுக் குத்தான் இருக்க முடியும். இரகசியப் போலீஸ் இலாகாவினிடம்

இந்தப் பிரச்னையை இதற்குப் பொறுப்புள்ள இலாகாவினர் ஒப்படைத்தால் அல்லாது, இதைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடத் தாங்கள் தகுதி படைத்தவர்கள் அல்ல என்ற குறிப்பை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்தபோது, பரீட்சையில் வரக்கூடிய கேள்விகள் இன்ன வகையில் இருக்கக்கூடும் என்று ஹேஷ்யங்கள் மூலமாக முடிவு கட்ட முடியும், தொடர்ந்து அந்தப் புத்தகம் இருப்பதால் அந்த முடிவுக்கு வர முடியும் என்று தெரிவித்தார்கள். இந்தியா படத்தில் அலகாபாத், பாடலிபுத்திரம், உஜ்ஜைன், காஞ்சி, நாலந்தா, மகதா, நேபாளம், மாளவம், குஜராத், அஸ்ஸாம் ஆகிய இப்படிப்பட்ட இடங்களைக் குறிப்பிடச் சொல்லும்போது, அவைகள் ஹேஷ்யங்கள் மூலமாக வருகின்றன என்று சொல்லமுடியாது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் அளவில் முன்னமே வெளியானது என்ற உண்மை தெரிகிறது. அதற்கு அதிகாரிகள் காரணமாக இருந்தார்கள் என்றோ, அமைச்சர்கள் காரணமாக இருந்தார்கள் என்றோ நான் குற்றம் கூறவில்லை. இதற்கு யார் காரணமாக இருந்தாலும், அதனால் ஏற்படுகிற இழுக்கு அரசைச் சார்ந்ததாக இருக்கிறது. இழுக்கு வராமல் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. எனவேதான் ஒத்தி வைப்புப் பிரேரணையாகக் கொண்டுவரப்படுவதற்கான காரணங்கள் இருக்கின்றன. அதை அனுமதிக்க வேண்டுவதற்கு அடிப்படை காரணங்கள் இருக்கின்றன. இதை அனுமதிப்பதன் மூலமாக எதிர்காலத்தில் நல்ல சூழ்நிலை உருவாக்கப் பயன்படும். எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் உருவாகாமல் இருப்பதற்கும் உறுதுணை புரியும் என்று நான் கருதுகிறேன். அந்த முறையிலேதான், தாங்கள் அன்று தீர்ப்பு அளித்ததற்குப் பிறகும் இந்த மன்ற விதிகளின் 49-வது விதியை நான் அறிந்திருந்தும், இந்தப் பிரச்னையை குறித்து விவாதத்திற்கு கொண்டு வரவேண்டிய நிலையில் இந்த பிரச்னையை எடுத்துக்கொள்ளலாம் என்று வேண்டி, தாங்கள் தக்க தீர்ப்பை அளிக்க, அதற்கான அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன என்று கருதி அந்தத் தீர்ப்பை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று முன் தினம் கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், ஏறக்குறைய இதே மாதிரியான அவசரப் பிரேரணையைக் கொண்டுவரத் தங்களுடைய அனுமதியைக் கோரினார்கள். நான் நிலைமையை விளக்கினேன். அதற்குப் பிறகு, தாங்கள், “இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல, குறுகிய கால கேள்வி வேண்டுமானால் கேட்கலாம்’ என்று கூறினீர்கள். கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அவ்வாறு கேட்பதாகக் கூறினார்கள். இதுவரையில் அம்மாதிரி கேள்வி ஒன்றும் வரவில்லை. அவர்கள் கையில் வைத்திருந்த சில தாள்களை என்னிடம் அளித்தார்கள். இப்பொழுது அவர்கள் கொடுத்திருக்கும் அவசரப் பிரேரணைக்குரிய விஷயம் நேற்று முன்தினம் நடைபெற்ற பரீட்சையைப் பற்றியது.

[திரு. எம். பக்தவத்சலம்] [23rd March 1964

'The question paper on Social Studies was out even before the date of examination'

என்று அவருடைய அவசரப் பிரேரணையில் வாசகம் தொடங்குகிறது. நேற்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் அந்த வினாத்தாள்களை என்னிடம் கொடுத்தார். நான் இந்தப் பரிட்சைகளை எல்லாம் நடத்துகின்ற அதிகாரி, துணை அதிகாரி, இந்த வினாத்தாளை நடத்துகின்ற அச்சக சூப்பிரன்டெண்டெண்ட், மற்றும் கல்வி இலாகா காரியதரிசி ஆகிய எல்லோரையும் வைத்துக்கொண்டு அந்த வினாத்தாள்களைப் பற்றிக் கலந்து பேசினேன். போலீசாரும் கூட இருந்தார்கள். வேறு ஏதோ வேலையாக வந்தார்கள், அவர்களையும் இருக்கும்படியாகச் சொன்னேன். எல்லோருமாகச் சேர்ந்து பரிசீலனை செய்த போது நான் நேற்று இந்த மன்றத்தில் என்ன சொன்னேனோ அதுதான் சரியானது, உண்மையானது என்பது ஊர்ஜிதமாயிற்று. "A particular paper, viz., Social studies has been out" என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவசரப் பிரேரணையில் கொடுத்திருக்கிறார்கள். அந்த வினைத்தாளில் 40 கேள்விகள் இருக்கின்றன. வெளியானதாகச் சொன்ன வினைத்தாளில் உள்ள கேள்விகள் அதிலும் இருக்கின்றன. இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் இந்த வினைத்தாளில் உள்ள பல கேள்விகள் அசல் வினைத்தாளில் கிடையாது. இதை மேலும் ஆராய்ந்தோம். நிச்சயமாக வினைத்தாள்கள் முன்கூட்டியே வெளியாகவில்லை என்பதுதான் ஊர்ஜிதமாயிற்று. ஒருசில பத்திரிகைகள் கேள்வித் தாள்கள் முன்கூட்டியே வெளியாகிவிட்டதாக முடிவு செய்யலாம். பத்திரிகையிலும் போடலாம். அதன் மூலம் குழப்பத்தை ஏற்படுத்தலாம். அரசாங்கத்தைக் கண்டிக்கவும் முற்படலாம். எதிர்க்கட்சியினரும் கூட அதை வைத்துக்கொண்டு அரசாங்கத்தை கண்டிக்க முற்படலாம். அது அவர்களுக்குள்ள உரிமை. அந்த உரிமையை அவர்கள் பயன்படுத்தக் கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் நிச்சயமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். வினைத்தாள் முன்கூட்டியே வெளியாகவில்லை. முன்கூட்டியே வெளியானதாக வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஆகவே இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல. தாங்கள் நேற்று முன் தினம் குறிப்பிட்டது போல கேள்வி போட்டால் விடை அளிக்கப்படும் என்று சொல்லி என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: The matter of leakage of S.S.L.C. question-papers was raised by the Hon. Leader of the Opposition the other day. The Hon. Leader of the House made a statement on the matter. I suggested that a Short Notice Question might be put and withheld my consent.

The Hon. Leader of the Opposition has brought more or less the same adjournment motion with a specific allegation that a particular paper, viz., Social Studies has been out. But, after hearing the Leader of the House, I think, this is more appropriately a subject for a Short Notice Question, which would be

23rd March 1964] [Mr. Speaker]

very useful to clarify the position. It will also enable the Government to make a proper investigation to find out the cause of the mischief. Further, Members will have an opportunity to discuss the matter during the discussion on the Appropriation Bill, I, therefore, withhold my consent to this adjournment motion.

III.—CALLING ATTENTION TO HARDSHIPS IN GETTING OWNERSHIP CERTIFICATES FOR INSTALLATION OF ELECTRIC PUMP SETS IN NORTH ARCOT DISTRICT.

புலவர் கா. கோவிந்தன்: கனம் சபாநாயகர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் விவசாய காரியங்களுக்கு மின்சார பம்பு செட்டுகள் நிறுவுவதற்காக "உரிமை சான்றிதழ்கள்" பெறுவதில் விவசாயிகள் அடையும் கஷ்டங்கள் பற்றி அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

SRI A. ARUMUGAM: Sir, I wish to call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, viz., hardships experienced by ryots in getting ownership certificates for installing electric pump sets for agricultural purposes in North Arcot district.

* THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, the Madras State Electricity Board incurs large capital expenditure every year for rural electrification. Before incurring such expenditure, the prospective consumers are required to enter into agreement with the Board for taking supply for agricultural purposes for a particular load and for a specified period. In order to ensure that the expenditure incurred by the Board does not result in loss, it is necessary that the agreements are executed by the lawful and registered owners of the lands and wells. For this purpose, ownership certificates are obtained from the officials of the Revenue Department.

2. Prior to August 1963, the ownership certificates issued by the Village Officers were being accepted by the field officers of the Madras State Electricity Board. Some of the certificates furnished by the Karnams were, however, found to be erroneous. In order to ensure that the certificates are free from defects, the State Electricity Board has issued instructions to the effect that ownership certificates issued by the Village Officials should be countersigned by Deputy Tahsildar or Tahsildars. The Electricity Board has no other alternative means to ensure that agreements are entered into with the lawful and registered owners in the revenue accounts. There is of course a time lag between canvassing of a scheme and the actual execution of the agreement, and the certificate countersigned by the Deputy Tahsildar is insisted upon only at the time of execution of the agreement. The Electricity Board has now requested that suitable instructions may be issued to the District Collectors regarding the issue of ownership certificates duly countersigned by the Deputy Tahsildars or Tahsildars. Instructions have been issued by the Government also accordingly to the Revenue staff through the Board of Revenue.